பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ.

மலர்: 20] சென்னை: புரட்டாசி 17 (3—10—72) செவ்வாய் | வெளியூர்: புரட்டாசி 18 (4—10—72) புதன் [இதழ்: 91

## கொள்முதல் இலக்கு—தமிழ்நாட்டின் நிலை

புதுடில்லி, செப். 30—

"பருவ மழை தவறியதால் 1.50 இலட்சம் டன் அரிசிக்கு மேல் தமிழ்நாடு கொள்முதல் செய்ய முடியாது"

என்று உணவு அமைச்சர்கள் மாநாட்டில் தமிழ்நாடு உணவு அமைச்சர் தெரிவித்தார்.

தமிழ்நாட்டுக்கு 2.50 இலட்சம் டன் கொள்முதல் இலக்கை வேளாண்மை விலைக் குழு நிர்ணயித்திருக்கிறது.

# ஈழத் தமிழர் உரிமைப் போர்

## காந்தி பிறந்த நாளில் துவங்கியது

### போராட்டத்தின் முதல் கட்டம்:— வெற்றிகரமான கடையடைப்பு—வேலைநிறுத்தம்

கொழும்பு, அக் 3—

தங்களுக்கு இழைக்கப்பட்டுவரும் அநீதிகளைக் கண்டித்து நேற்று இலங்கைத் தமிழ்க் குடிமக்கள் பொது வேலைநிறுத்தம் கடைபிடித்தனர்.

தமிழர்கள் வாழும் பகுதிகளான இலங்கையின் வட—வட கிழக்குப் பகுதிகளில் இந்தப் பொது வேலைநிறுத்தம் வெற்றிகரமாகவும்—அமைதியாகவும் நடைபெற்றிருக்கிறது.

இப்பகுதிகளில் பள்ளிகளும்—கலையரங்குகளும்—கடைகளும் திறக்கப்படவில்லை; மக்கள் தத்தம் வீடுகளிலிருந்து வெளிவரவேயில்லை; அதனால் சாலைகளெல்லாம் வெறிச்சோடிக்கிடந்தன.

இலங்கையில் உள்ள மொத்த மக்கட் தொகையில் தமிழ் மக்கள் 22 சதவிகிதம் பேர் ஆவர்; ஆயினும் இலங்கையில் புதிதாகக் கொண்டுவரப்பட்டுள்ள அரசியல் சட்டத்தில் தமிழர் உரிமைகள் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

இதை, தமிழ்க் குடியினர் எதிர்த்து வந்திருக்கின்றனர்; ஆயினும், இலங்கை அரசு பிடிவாதமாகவே இருந்துவருவதால், அமைதியான அறப்போராட்டத்தில் ஈடுபடுவது என்று முடிவு செய்து—நேற்று காந்தி பிறந்த நாளன்று முதல் கட்டப் போராட்டத்தைத் தொடங்கியிருக்கின்றனர்.

தமிழர் நலனைக் காப்பதற்காக நடைபெறும் இப்போராட்டத்தில், பல பிரிவுகளாக இருந்து வந்த தமிழர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்திருக்கின்றனர்.

தமிழர் முன்னணி 6, அம்சக் கோரிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறது.

சிங்கள மொழிக்குச் சமமான தகுதியை தமிழ்மொழிக்கும் அளிக்க வேண்டுமென்பதும், இலங்கைத் தீவின் எல்லா மதத்தினரும் பாரபட்சமின்றி நடத்தப்படவேண்டுமென்பதும் இந்தக் கோரிக்கைகளில் முக்கியமானவைகளாகும்.

தங்களின் தேசியக் கொடியான உதயசூரியன் கொடியின் கீழ் தமிழர்கள் தங்கள் ஒன்றுபட்ட போராட்டத்தைத் தொடங்கியிருக்கின்றனர்.

நேற்றைய பொதுவேலை நிறுத்தம் முழு வெற்றியடைந்திருந்தும், ஒரு சிறு வன்முறை நிகழ்ச்சி கூட நடைபெறவில்லை.

தங்களது கோரிக்கை நிறைவேறும் வரையில் இலங்கை அரசாங்கச் சட்டத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்றும், அதுவரையில் அறப்போர் தொடரும் என்றும் அவர்கள் உறுதி எடுத்தனர்.

சிந்தனையிலும் — சொல்லிலும் — செயலிலும் அமைதி முறையையே கடைபிடிப்பது என்றும் உறுதிமொழி எடுத்தனர்; தமிழர் வீடுகளிலெல்லாம் உதய சூரியன் கொடி ஏற்றி வைக்கப்பட்டிருந்தன.

தமிழர் முன்னணியின் தலைவரான 74 வயது எஸ். ஜே. வி. செல்வநாயகம், தேசிய சட்டமன்றத்தில் உறுப்பினராக இருக்கிறார்; புதிய அரசியல் சட்டத்தைத் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை எடுத்துக்காட்டும் பொருட்டு அவர் தமது பதவியை இராஜினாமா செய்து மீண்டும் தேர்தலில் நிற்கப் போகிறார்.

# காந்தியார் கனவை நனவாக்கும் தமிழகம்

## இந்தியாவிலேயே முன்னணியில் விளங்கிவருகிறது

### காந்தியார் பிறந்தநாள் விழாவைத் துவக்கிவைத்து முதல்வர் பெருமிதம்

சென்னை, அக். 2—

'காந்தியாரின் இலட்சியங்களைக் கடைபிடிப்பதில் தமிழகம் எப்போதும் பின்தங்கியதில்லை.

"ஒரு மாபெரும் மேதையின் தத்துவங்களும் – இலட்சியங்களும் அனைவராலும் – எப்போதுமே கடைபிடிக்கப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுவதில்லை.

'பண்டித நேரு, சுபாஷ் சந்திர போஸ், சர்தார் பட்டேல் போன்றவர்களெல்லாம் சில கொள்கைகளில் காந்தியாரிடமிருந்து மாறுபட்டிருந்தாலும், காந்தியார் அனைவராலும் விரும்பப்பட்டார்.

'தமிழ்நாடு, தன்னால் முடிந்த அளவுக்குக் காந்தியாரின் இலட்சியங்களைக் கடைபிடித்து வருகிறது; ஆனால் அவரது சில கொள்கைகள், நாடு முழுவதிலும் கடைபிடிக்கப்பட்டால்தான் செயல்படுத்தக் கூடியதாகும்.

'காந்தியார் மிகவும் கவலைப்பட்டிருந்த அரிசன முன்னேற்றத் திட்டங்களைத் தமிழகம் செம்மையாகச் செயல்படுத்தி வருகிறது; கோவிலில் சென்று வழிபடும் உரிமை மட்டுமல்ல – அவர்கள் கோவில் பூசை செய்யும் உரிமை பெற்றவர்களாகவும், அறங்காவலர்களாகவும் ஆகக்கூடிய வாய்ப்புக்களையும் தமிழகத்தில் ஏற்படுத்தியிருக்கிறோம்"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், கிண்டியிலுள்ள காந்தி நினைவு மண்டபத்தில் நடைபெறும் ஒரு வார விழாவைத் துவக்கிவைத்துப் பேசுகையில சுட்டிக்காட்டி விளக்கினார்.

சென்னை — கிண்டியிலுள்ள காந்தி நினைவு மண்டபத்தில் காந்தி பிறந்த நாள் விழா நேற்று கொண்டாடப்பட்டது.

ஒரு வாரம் வரை நடைபெறவிருக்கும் இந்த விழாவை ஆளுநர் திரு. கே. கே. ஷா முன்னின்று நடத்துகிறார்.

முதலமைச்சர் கலைஞர் அவர்கள் விழாவைத் துவக்கிவைத்துப் பேசுகையில், 'காந்தியாரின் இலட்சியங்களில் முதன்மையானதான அரிசன முன்னேற்றத்தில் தமிழகம் சிறந்து விளங்குகிறது' எனக் குறிப்பிட்டார்.

"அரிசனங்கள் கோயில் பூசாரிகளாகவும்—டிரஸ்டிகளாகவும வருவதற்கு வாய்ப்பு அளிக்கும் சட்டம் நாட்டிலேயே முதன்முதலாகத் தமிழகத்தில்தான் நிறைவேற்றப்பட்டிருக்கிறது" என்று அவர் சுட்டிக்காட்டினார்.

# அண்ணல் காந்திக்கு தமிழகத் தலைநகர் எடுத்த விழா

## அனைத்துக் கட்சிப் பொதுக்கூட்டத்தில் முதலமைச்சர் மற்றும் தலைவர்கள் சூட்டிய புகழாரம்

### விடுதலைப் போராட்ட வீரர்களுக்குச் செப்பேடு— சிதம்பரனார் இழுத்த செக்குத் திறப்பு

சென்னை, அக். 3—

சுதந்தரப் போராட்ட வீரர்களுக்கு செப்பேடு (தாமிரப் பட்டயம்) வழங்கும் விழா, நேற்று பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் நடைபெற்றது.

சென்னை — செங்கற்பட்டு மாவட்டங்களைச் சேர்ந்த 113 வீரர்களுக்குப் பட்டயம் வழங்கப்பட்டது; இவர்களில் 69 பேர் சென்னையைச் சேர்ந்தவர்களாவர்.

ஏற்கனவே டில்லியில் செப்பேடு வழங்கப்படாத போராட்ட வீரர்களுக்கு அதனை வழங்கும்படி மத்திய அரசு கேட்டுக்கொண்டதற்கு இணங்க மாநில அரசு, நேற்றைய விழாவினை ஏற்பாடு செய்தது.

திருவாளர்கள் இராசகோபாலாச்சாரியார், தந்தை பெரியார், காமராசர், பக்தவத்சலம் ஆகியோருக்கும் செப்பேடு வழங்கப்படவிருந்தது; ஆனால், இவர்கள் யாரும் நேற்றைய விழாவுக்கு வராததால் அவர்களுக்கு வழங்கப்படவில்லை.

திரு. இராசகோபாலாச்சாரியார் கேட்டுக் கொண்டதற்கிணங்க, இன்று அவரது இல்லத்திற்குச் சென்று செப்பேட்டை முதலமைச்சர் கலைஞர் அளிக்கிறார்.

#### ஆளுநர் கே. கே. ஷாவும் நேரில் பெற்றார்

தமிழக ஆளுநர் கே. கே. ஷாவுக்கும் சிறப்புச் செப்பேடு வழங்கப்பட்டது.

முதல்வர் கலைஞர் கையால் செப்பேட்டை பெற்றுக்கொண்ட ஆளுநர், 'சுதந்தரப் போராட்டக் காலத்தில் காந்தியார் நாட்டு மக்களை ஒன்றுபடுத்தினார்' என்று குறிப்பிட்டார்.

"வேறுபாடுகளால் உடைக்க முடியாத ஒரு பாறை போன்று மக்கள் ஒன்றுபட்டுச் செயல்பட வேண்டும்" என்று அவர் கேட்டுக் கொண்டார்.

"வறுமையையும் — அறியாமையையும் அகற்றுவது தங்களது கடமையாகும் என்பதை மக்கள் உணரவேண்டும்" என்று குறிப்பிட்ட ஆளுநர் [illegible]நாயகத்துக்

(4-ம் பக்கம் பார்க்க)

# ஆளுநர் — முதல்வர் இடையே போட்டி!

## காந்தி விழாவில் நகைச்சுவை விருந்து

சென்னை, அக். 3—

"ஆளுநர் கே. கே. ஷா அவர்கள் போட்டி போட்டுக் கொண்டு என்னை முந்தப் பார்க்கிறார்; ஆனால் நாங்கள் இருவரும் அதனை விரும்புகிறோம்"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நேற்று வேடிக்கையாகக் குறிப்பிட்டார்.

காந்தியார் பிறந்த நாள் விழாவைக் கொண்டாட கலைஞரும்— ஆளுநரும் இரு இடங்களில் ஏற்பாடு செய்திருப்பதைக் குறிப்பிட்டே கலைஞர் மேற்கண்டவாறு கூறினார்.

ஆளுநர், கிண்டி காந்தி மண்டபத்திலும், கலைஞர் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்திலும் இந்த விழாக்களை நடத்தினர்.

காந்தி மண்டபத்தில் ஆளுநர் ஏற்பாடு செய்த விழாவைத் தொடங்கிவைத்து முதலமைச்சர் பேசுகையில், 'எங்களது போட்டி வரவேற்கத்தக்கதே; ஏனெனில், அது மக்களுக்கு

(4-ம் பக்கம் பார்க்க)

கழகத் தலைவர் கலைஞர் உரிமை முழக்கம்

# தியாக வரலாறுகள் கழகத்திற்கு உண்டு

## உரிமைக் கொடி தாழாமலிருக்க உயிர்ப் பலிகள் தந்திருக்கிறோம்

### சுதந்தரம் பறிக்கப்படுகையில் -- நியாயமான கோரிக்கைகள் புறக்கணிக்கப்படுகையில் தொழிலாளர்களுக்குத் தோள் கொடுத்து நின்றது தி. மு. க.

சென்னை, செப். 30—

"திராவிட முன்னேற்றக் கழகத்தில் உள்ளவர்கள் – கழகச் சார்புடையவர்கள் இன்று பல்வேறு இடங்களில் தொழிற்சங்கங்களை அமைத்து நடத்திவருகிறார்கள் என்றாலும், முன்னேற்றக் கழகத்திற்குத் தொழிற்சங்கங்களுடனான பிணைப்பு பல ஆண்டுக் காலத்திற்கு முன்பே ஏற்பட்ட ஒன்றாகும்.

தி. மு. கழகத்தில் தொழிற் சங்கங்களை அமைத்து உருவாக்காத அந்தக் காலத்திலேகூட எங்கெங்கே தொழிற் சங்க உரிமைகள் பாதிக்கப்படுகின்றனவோ – தொழிலாளர்களின் சுதந்தரம் பாதிக்கப்படுகின்றனவோ – தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகள் புறக்கணிக்கப்படுகின்றனவோ அங்கெல்லாம், அவைகள் எந்தத் தொழிற்சங்கங்களாக இருந்தாலும் – கோரிக்கைகள் நியாயமாக இருந்தால் அந்தப் பக்கத்தில் நின்று -- தொழிலாளர்களுக்குத் தோள் கொடுத்தது தி. மு. கழகம்தான்!

இரண்டாண்டுக் காலத்திற்கு முன்பு தொழிற் சங்கப் பேரவை உருவாக்கப்பட்டது; பல்வேறு பகுதிகளில் கழக நண்பர்கள் ஈடுபட்ட தொழிற் சங்கங்கள் பரவிக் கிடந்த காரணத்தால் அவைகளையெல்லாம் ஒன்று சேர்த்து ஓர் இணைப்பில் கொண்டுவர உருவாக்கப்பட்டதுதான் தொழிற் சங்கப் பேரவை; அந்தப் பேரவையுடன் பல்வேறு கழக நண்பர்கள் ஈடுபட்டுள்ள தொழிற் சங்கங்கள் இணைக்கப்பட்டிருக்கின்றன!

"இது சிலருக்கு எரிச்சலைத் தந்திருக்கிறது; 'தி. மு. கழகம் தொழிற் சங்கத்தை நடத்துவதா' என்று பொருமுகின்றனர்; அவர்கள் இனியேனும் தங்களைத் திருத்திக் கொள்ள வேண்டும்; தி. மு. கழகமே தொழிற் சங்கத்தை நடத்திக்கொண்டிருக்கவில்லை; தமிழ்நாட்டில் இருக்கின்ற பல தொழிற் சங்கங்களில் எப்படிப் பல கட்சிகளையும் சேர்ந்தவர்கள் [illegible]ர்களோ அதைப்போல் தி. மு. கழகத்தைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள்; இதை அவர்கள் நன்கு புரிந்துகொள்ள வேண்டும்"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், படுகொலை செய்யப்பட்ட தி. மு. கழகத் தொழிற் சங்கத் தலைவர் பிரதாப் சந்திரன் குடும்பத்துக்கு – அசோக் லேலண்டு தொழிலாளர் சார்பில் தரப்பட்ட நிதி யளிப்பு விழாவில் கலந்துகொண்டு பேசுகையில் தெள்ளத் தெளிவுற விளக்கிக் கூறினர்.

கொலையுண்ட பிரதாப் சந்திரன் குடும்பத்துக்கு ரூ. 15,000 நிதி வழங்கப்பட்டது.

அன்றையத் தினமே கொலையுண்ட கண்ணன் குடும்பத்துக்கும் ரூ. 2,000 நிதி வழங்கப்பட்டது.

தொழிலாளர் நலத்துறை அமைச்சர் என். வி. நடராசன், போக்குவரத்துத்துறை அமைச்சர் எஸ். இராமச்சந்திரன் ஆகியோரும், மற்றும் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவைப் பொதுச்செயலாளர் காட்டூர் கோபால் எம்.எல்.சி., தொழிற்சங்கத் தலைவர் மா. வெ. நாராயணசாமி எம்.எல்.ஏ. ஆகியோர் பேசினர்.

நிதியினை வழங்கி முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பேசுகையில் கூறியதாவது:—

"அசோக் லேலண்டு தொழிலாளர்கள் ஏற்கனவே பல நேரங்களில், 'தமிழகத்தின் பொது நிதிகளுக்கு அள்ளி வழங்கத் தயங்கார்' என்ற பெரும் புகழை ஈட்டிக்கொண்டிருக்கின்றனர்.

தமிழக அரசின் கண்ணொளி வழங்கும் திட்டத்திற்குக்கூட ரூ 2,000 அளித்திருக்கின்றனர்.

நிறைவேற்றப்பட வேண்டிய பணிகள் வெற்றிகரமாக நிறைவேறுவதற்குக் கடமையை உணர்ந்து உற்றுழி வழங்கி உதவியிருக்கின்றனர் -- உதவிக் கொண்டும் வருகின்றனர் -- என்றைக்கும் உதவுவர் என்ற நம்பிக்கையும் இருக்கிறது.

### தியாக வரலாறுகள் -- கழகம் உருவாக்கியது

திராவிட முன்னேற்றக் கழகம் எவ்வளவோ இளம் தியாகிகளைக் கழகத்தின் வளர்ச்சிக்காக -- நாட்டு மக்களின் நலனுக்காக -- மொழி உரிமைக்காக -- வரலாற்றுக் கருவூலங்கள் ஆதிக்க வர்க்கத்தினரால் அழிந்துபடாமல் காப்பதற்காக இழந்திருக்கிறது!

ஆதிக்கபுரியினரை எதிர்த்த நேரத்தில் உரிமைக் கொடி தாழாமல் உயர்ந்து நிற்பதற்காக உயிரைத் தத்தம் செய்து தியாக வரலாறுகளை உருவாக்கியிருக்கிறது!

அப்படிப்பட்ட தியாகிகளின் பட்டியலில் பிரதாப் சந்திரனும் தன்னுடைய பெயரை இணைத்துக் கொண்டுவிட்டார்!

தொழிற்சங்கமானாலும் அல்லது வேறு எந்த நிறுவனங்களானாலும் -- எந்த அமைப்புகளானாலும் -- அதனுடைய வெற்றிகளுக்கு வன்முறைகள் பரிகாரங்கள் ஆகாது!

வன்முறை -- இருபுறமும் கூர் வாய்ந்த ஒரு கத்தி; ஆகவே, வன்முறையை ஒருமுறை பயன்படுத்தினால் -- அந்த வன்முறை திரும்பிப் பயன்படுத்தியவர்களையே தாக்கும்".

என்ற பொன்மொழியை அறிஞர் அண்ணா அவர்கள் பலமுறை நமக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறார்; அதை அடிப்படையாக வைத்துத்தான் இங்கே பேசிய நண்பர்கள் பலரும், 'வன்முறை தொழிலாளர்களுக்கு ஆகாது' என்று எடுத்துக் கூறினர்.

### துரோகம் என்ன செய்தோம்?

தி. மு. கழகத்தைப் பொறுத்த வரையில், தொழிலாளர்களுக்கு என்ன துரோகம் செய்தது?

தேசியமயக் கொள்கையை, இந்தியாவிலுள்ள எல்லா மாநிலங்களையும் முந்திக்கொண்டு தமிழகத்தில் நடைமுறைப்படுத்திக் கொண்டு வருகிறோம்.

### ஏற்றுக்கொண்ட தொல்லைகள் சாமானியமானதா?

மே தினத்திற்காக சம்பளத்துடன் விடுமுறை விட்ட அரசு முன்னேற்றக் கழக அரசு; இந்த முடிவு எடுக்கப்பட்ட பிறகு, அது சாதாரணமாகத் தெரியலாம்; ஆனால், மே தினத்திற்கு விடுமுறை வேண்டுமென்று எத்தனை ஆண்டுக் காலம் போராடினோம்? எவ்வளவு தொல்லைகளை தொழிலாளர் வர்க்கம் ஏற்றுக்கொண்டது? அதைக் கணக்கிட்டால்தான் இது எவ்வளவு பெரியது என்பது தெரியும்.

### பொய்ப் பிரசாரம் செய்வோர் உணரட்டும்

முன்னேற்றக் கழக அரசுக்குத் தொழிலாளர்களிடம் அனுதாபமில்லை -- என்று பொய்ப் பிரசாரம் செய்யும் நண்பர்களைக் கேட்கிறேன்; இந்தியாவிலேயே எத்தனையோ மாநிலங்களில் ஆலைகள் மூடப்பட்டுள்ளன; தமிழ்நாட்டிலும் மூடப்பட்டது; ஆனால், தமிழ்நாட்டில்தான் மூடப்பட்ட ஆலைகளில் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்காக அண்ணா காலத்தில் இரண்டு இலட்சம் ரூபாயும் -- என்னுடைய காலத்தில் ஐந்து இலட்சம் ரூபாயும் தொழிலாளர்களின் நிவாரணத் தொகையாக அளிக்கப்பட்டது.

### தத்துவங்கள் எங்களுக்குத் தெரியாததல்ல!

எங்களுக்கும் -- தொழிலாளர்களுக்கும் தொடர்பு இல்லை என்று கூறுகிறவர்களுக்குச் சொல்கிறேன் -- நாங்கள் அனைவருமே தொழிலாளர்கள்தான்; இன்று அமைச்சரவையிலே இருக்கின்ற நாங்கள் யாரும் மிட்டா மிராசு குடும்பத்தில் பிறந்தவர்களல்லர் அமைச்சரவையிலே இருக்கிற நாங்கள் அனைவரும் தொழிற் சங்கத்தின் தத்துவங்களைப் புரிந்தவர்கள்தான் -- தொழிலாளர்கள்தான்!

### தொழிலாளர்கள் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் நாங்கள்!

நாங்கள் ஏதோ பெரிய குபேரர் வீட்டுப் பிள்ளைகள் என்றோ, புதிதாகத் தொழிற் சங்கப் புத்தகங்களைப் படித்துவிட்டு வந்தவர்கள் என்றோ கருதுவது தவறு; நாங்கள் தொழிலாளர் வர்க்கம்தான்! அவர்களோடு இருப்பவர்கள்தான்! என்றைக்கும் இருக்கப்போகிறவர்கள்தான்!"

---

## உயிருக்கு அபாயம் விளைவிக்கும் கேசரிப் பருப்பு

### உணவுப் பண்டத்துடன் கலக்கும் முயற்சி தடுக்கப்பட்டது

சேலம், செப். 30—

அண்மையில் சேலம் நகராட்சி அதிகாரிகள், 110 மூட்டை கேசரிப் பருப்பைக் கைப்பற்றினர். இந்த 110 மூட்டை பருப்பையும் அழித்து விடும்படி அடிஷனல் முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் உத்தரவிட்டிருக்கிறார்.

கேசரிப் பருப்பை பயன்படுத்துவது மிகவும் அபாயகரமானது என்று கூறப்படுகிறது; தமிழ் நாட்டில் அதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மத்தியப் பிரதேசத்திலிருக்கும் ரெய்ப்பூரிலிருந்து நாகபுரியைச் சேர்ந்த ஒரு வியாபாரி தன்னுடைய பெயரில் இந்த 110 மூட்டைகளை இரயிலில் அனுப்பியிருந்தார்; உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டத்தின் கீழ் சேலம் மார்க்கெட் இரயில்வே நிலையத்தில் நகராட்சி சுகாதார ஊழியர்கள் இந்த மூட்டைகளைக் கைப்பற்றினர்.

இந்த மூட்டைகளை ரெய்ப்பூருக்குத் திருப்பி எடுத்துக்கொண்டு செல்லத் தம்மை அனுமதிக்கும்படி கோரி -- வியாபாரி ஒரு மனு தாக்கல் செய்திருந்தார்; இந்தக் கோரிக்கையை மாஜிஸ்திரேட் நிராகரித்து விட்டார்.

---

## விழி இழந்தோருக்கு மறுவாழ்வு

### மதுரை மருத்துவக் கல்லூரியில் திட்டம் துவக்கம்

புதுடில்லி, செப். 30—

கிராமப் புறங்களிலுள்ள பார்வையற்றோர்களுக்கு அவர்களது வீடுகளிலேயே மறுவாழ்விப்பு அளிக்கும் முன்னோடித் திட்டம் ஒன்றைத் தமிழ்நாட்டில் மதுரை மருத்துவக் கல்லூரி துவக்கியுள்ளது.

கல்லூரியின் கண் நோய்ப் பிரிவுத் தலைவர் டாக்டர் ஜி. வெங்கடசுவாமி, முன்னோடித் திட்டத்தின் நெறியாளர் ஆவார்; மதுரை நகரைச் சுற்றியுள்ள ஐந்து வட்டார வளர்ச்சித் தொகுதிகளில் கள ஆய்வுகள் நடத்தும் சமுதாய ஊழியர்களின் ஒரு குழுவுக்கு அவர் தலைமை தாங்குவார்; மேற்சொன்ன தொகுதிகளில் ஐந்து இலட்சம் மக்கள் வாழ்கிறார்கள்.

பார்வையற்றோர்களின் வீடுகளுக்கு சமுதாய ஊழியர்கள் சென்று -- அவர்கள் தட்டுத் தடங்கலின்றி நடமாடுவதற்குரிய முறைகளைக் கற்பிப்பார்கள்; முடியுமானால், அவர்கள் (பார்வையிழப்பதற்கு) முன்பு பார்த்து வந்த வேலைகளைச் செய்வதற்கும் பயிற்சியளிப்பார்கள்.

பார்வையற்றோர் மனவுறுதி கொள்ளுமாறு செய்வதும் இணையான முக்கியம் உள்ளது; அவர்கள் மீண்டும் தன்னம்பிக்கை கொள்ளுமாறு செய்வதில்சமுதாய ஊழியர்கள் முயற்சிப்பர்; பார்வையற்றோர் குடும்பங்களுக்கும் ஆலோசனைகள் கூறுவார்கள்; எனவே, ஒளி இழந்ததால் ஏற்படும் தவிர்க்க முடியாத சிக்கல்களைக் கூடுதல் திறமையுடன் வெல்வது முடியும்.

நகரங்களில் வாழும் பார்வையற்றோர்களின்மறுவாழ்விப்புக்காக அமெரிக்க அரசின் உதவியுடன் 1967-ல் மதுரையில் நிறுவப்பட்ட ஒரு முன்னோடி நிலையம், மேற்சொன்னதுபோன்ற முறைகளின் பயனை வெற்றியுடன் புலப்படுத்தியது; தற்போது அந்நிலையம் தமிழ்நாட்டு அரசின் ஆதரவில் நடைபெற்று வருகிறது.

மதுரைக் கல்லூரியின் புதிய ஆராய்ச்சித் திட்டத்துக்கு அமெரிக்க அரசு ரூ. 3,70,000 மானியம் வழங்கியுள்ளதென்று அமெரிக்கத் தூதரகப் பொறுப்பு அதிகாரி காலன் எல். ஸ்டோன் அறிவித்தார்.

"உலகம் முழுவதிலும், நாட்டுப் [illegible] வாழும் பார்வையற்றோர்களின் மறுவாழ்விப்புக்காகத் திட்டங்கள் தீட்டுவதில் மதுரைத் திட்டம் மாபெரும் பயன் விளைவிக்கும் என எதிர்பார்க்கிறோம்; பார்வையற்றோர் முன்னிலும் மகிழ்ச்சியோடும்—முன்னிலும் பயனுள்ள வர்களாகவும் வாழத் துணை செய்வதில் புதிய முறைகளை வகுப்பதில் மதுரை விஞ்ஞானிகள் முன்பு வியப்பூட்டும் வாய்ப்புகள் உண்டு" என்று ஸ்டோன் கூறினர்.

---

## அடுத்த பல்கலைக் கழகம் எங்கே அமையும்?

### ஆசிரியப் பயிற்சி மீண்டும் எப்போது துவங்கும்?

### செய்தியாளர்கள் கேள்விகளுக்கு கல்வி அமைச்சர் நாவலர் அளித்த பதில்

வேலூர், செப். 29 –

செகண்டரி கிரேடு ஆசிரியைப் பயிற்சி மீண்டும் எப்போது துவக்கப்படும்? -- நான்காவது பல்கலைக் கழகம் எங்கு ஏற்படுத்தப்படும்? -- நகரராட்சித் தலைவர்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்களா? -- என்பன போன்ற கேள்விகளுக்குக் கல்வி -- உள்ளாட்சித் துறை அமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பதிலளித்திருக்கிறார்; இங்கு நிருபர்கள் கேட்ட கேள்விகளும் நாவலர் அளித்த பதில்களும் வருமாறு:—

கேள்வி:—"செகண்டரி கிரேடு ஆசிரியர் பயிற்சி 1974-ம் ஆண்டுதான் மீண்டும் தொடங்கும் என்று கூறியிருந்தீர்களே -- அதில் ஏதாவது மாற்றம் உண்டா?"

பதில்:— "இப்போது ஒன்றும் சொல்லுவதற்கில்லை; அடுத்த ஆண்டில் நிலைமையை அறிந்து -- அப்போது இதுகுறித்து முடிவு எடுக்கப்படலாம்."

கேள்வி:— "தற்போது பி. டி. படித்த பட்டதாரி ஆசிரியர்களும் ஏராளமாக வேலையில்லாமல் இருக்கிறார்கள்; இந்த நிலைமை நீடித்தால், செகண்டரி கிரேடு ஆசிரியர் பயிற்சி நிறுத்தப்பட்டதுபோல் இதுவும் நிறுத்தி வைக்கப்படுமா?"

பதில்:— "நிலைமையை அனுசரித்து அதற்கேற்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்."

கேள்வி:—"தமிழ்நாட்டில் ஆசிரியர் பயிற்சியை முடித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கும் பி. டி. பட்டதாரி ஆசிரியர்கள் 900 பேருக்கு மத்திய அரசு வேலை வாய்ப்புக் கொடுக்க ஒரு திட்டம் கொண்டு வந்ததே -- அதன்படி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு விட்டார்களா?"

பதில்:—"இல்லை."

கேள்வி:— "தொழில் நுட்பப் பல்கலைக்கழகம் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டிருந்ததே -- அது எந்த நிலையில் உள்ளது?"

பதில்:— "சென்னையில் இதனை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டிருக்கிறது; டெல்லியின் அனுமதிக்காக எழுதியிருக்கிறோம்; [illegible] மாகத்தான் இருக்கிறது."

கேள்வி:—"தற்போது தமிழ்நாட்டில் 3 பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன; நான்காவது பல்கலைக் கழகம் கோவையில் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று கேட்டு வந்தார்கள்; அப்படி அங்கு ஒரு பல்கலைக் கழகம் ஏற்படுத்தப்படுமா?"

பதில்:—"இப்போது அப்படி ஒரு திட்டம் இல்லை; ஒரு பல்கலைக் கழகம் உண்டாக்கினால் அதற்கு ரூ 10 கோடி கட்டடத்திற்கு மட்டும் செலவு ஆகிறது; மதுரைப் பல்கலைக் கழகத்துக்கு இதுவரையில் ஒன்றரைக் கோடி ரூபாய் கட்டடத்திற்கு மட்டும் செலவு செய்யப்பட்டிருக்கிறது."

கேள்வி:—"ஊராட்சித் தலைவர்களை மக்கள் ஓட்டு போட்டுத் தேர்ந்தெடுப்பதுபோல், நகராட்சித் தலைவர்களையும் மக்களே ஓட்டு போட்டுத் தேர்ந்தெடுக்கும் முறை செயல்படுத்தப்படுமா?"

பதில்:—"அப்படி ஒன்றும் இப்போது இல்லை; இதுசம்பந்தமாக நகராட்சித் தலைவர்கள் முடிவு எடுத்துக் கூறினால் அது பற்றிப் பரிசீலிக்கப்படும்."

---

## காவலாளியுடன் போராடி கைதிகளை விடுவித்தனர்

### இலங்கையில் மீண்டும் கலகக்காரர்கள் தலைதூக்குகிறது?

கொழும்பு, செப். 30—

இலங்கையில் சென்ற ஆண்டு நடந்த கலவரத்தில் சம்பந்தப்பட்டதாக வடக்கு மத்திய மாநிலத்திலுள்ள அனுராதபுரத்தில் காவலில் வைக்கப்பட்டிருந்த 30 கைதிகளை ஆயுதந்தரித்த 25 பேர் கொண்ட ஒரு குழுவினர் விடுவித்தனர். சிறைக் காவலர்களுடன் போராடிய பின் அந்தக் கைதிகளை அக்குழுவினர் விடுவித்தனர்.

அந்தக் குழுவினர், கலகக்காரர்கள் அணியும் நீல சீருடை அணிந்து, கைக்குண்டுகள் -- [illegible]டன் வந்தனர்; இரவு சுமார் 1-30 மணிக்கு சிறையின் சுவர்மீது ஏறி உள்ளே குதித்தனர். அங்கிருந்த காவற்காரர்களுடன் போராடி அவர்களை மடக்கிப் போட்டுவிட்டு கைதிகளை விடுவித்தனர்; ஏழு நிமிட நேரத்திற்குள் எல்லாம் நடந்து முடிந்துவிட்டது.

சிறையிலிருந்து அவர்களைத் தவிர வேறு ஐந்து கைதிகள் தப்பியோடிவிட்டனர்; அவர்களில் ஒருவர் மீண்டும் பிடிக்கப்பட்டு விட்டார்.

கலகக்காரர்கள் இவ்வாண்டில் இதைச் சேர்த்து இதுவரையில் நான்கு தடவை சிறைகளுக்குள் புகுந்து கைதிகளை விடுவித்துள்ளனர்.

அனுராதபுரம் சிறையிலிருந்து சில மாதங்களுக்குமுன் 30 கலகக்காரக் கைதிகள் தப்பியோடி பக்கத்திலுள்ள காடுகளுக்குப் போய் விட்டனர்.

---


## தமிழ்நாடு அரசு

### தொழில் மற்றும் வணிகத் துறை

### ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு

தமிழ்நாடு ஆளுநர் சார்பில், தொழில் மற்றும் வணிகத் துறை கட்டுமானப் பிரிவு மேற்பார்வைப் பொறியரால், தொழில் வணிகத் துறையின் கட்டுமானப் பிரிவு மற்றும் ஏனைய துறைகளினால் தரம் படுத்தப்பட்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து கீழ்க்காணும் [illegible] வேலைகளுக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள், கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தேதிகளில் பிற்பகல் 3 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

ஒப்பந்தப் புள்ளிகள், சென்னை-17, தியாகராயநகர், 2, விஜயராகவாச்சாரி [illegible]யில் உள்ள தொழில் வணிகத்துறை மேற்பார்வைப் பொறியரால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தப் புள்ளி பெறுவதற்குக் கடைசி நாளான பிற்பகல் 3-10 மணிக்கு -- நேரில் இருக்க விரும்பும் ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறந்து பார்க்கப்படும்.

| வரிசை எண் | வேலையின் பெயர் | பொறுப்புத் தொகை | ஒப்பந்த நிபந்தனை அறிக்கைகளின் விலை | முடிக்க வேண்டிய காலவரம்பு | ஒப்பந்த நிபந்தனை அறிக்கைகள் கிடைக்கும் தேதி | ஒப்பந்தப் புள்ளி பெறுவதற்கான கடைசித் தேதி |
|---|---|---|---|---|---|---|
| 1. | ஒப்பந்த எண் 1 அடையாற்றிலுள்ள இன்ஸ்டிரானிகல் சுற்று வளைவுக்குள் II டைப் பணிமனைகள் 2 கட்டுதல் | ரூ. 2,200 | ரூ. 10.40 | 6 மாதங்கள் | 12-10-72 | 31-10-72 |
| 2. | ஒப்பந்த எண் 2 அடையாற்றிலுள்ள இன்ஸ்டிரானிகல் சுற்று வளைவுக்குள் II டைப் பணிமனைகள் 2 கட்டுதல் | ரூ. 2,200 | ரூ. 10.40 | 6 மாதங்கள் | 12-10-72 | 31-10-72 |
| 3. | ஒப்பந்த எண் 3 அடையாற்றிலுள்ள இன்ஸ்டிரானிகல் சுற்று வளைவுக்குள் II டைப் பணிமனைகள் 2 கட்டுதல் | ரூ. 2,200 | ரூ. 10.40 | 6 மாதங்கள் | 12-10-72 | 31-10-72 |
| 4. | ஒப்பந்த எண் 4 அடையாற்றிலுள்ள இன்ஸ்டிரானிகல் சுற்று வளைவுக்குள் II டைப் பணிமனைகள் 2 கட்டுதல் | ரூ. 2,200 | ரூ. 10.40 | 6 மாதங்கள் | 13-10-72 | 31-10-72 |
| 5. | ஒப்பந்த எண் 5 அடையாற்றிலுள்ள இன்ஸ்டிரானிகல் சுற்று வளைவுக்குள் II டைப் பணிமனைகள் 2 கட்டுதல் | ரூ. 2,200 | ரூ. 10.40 | 6 மாதங்கள் | 13-10-72 | 31-10-72 |

(1) ஒப்பந்த வடிவம்: முழுத் தொகை

(2) ஒப்பந்த விவர அறிக்கைகள், சென்னை 32-ல் உள்ள கிண்டி தொழில்பேட்டை, வடக்குக் கோட்ட நிர்வாகப் பொறியர் (கட்டுமானம்) அலுவலகத்தில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தேதிகளில் -- அலுவலக நேரங்க[illegible]லக்குக் கிடைக்கும்.

(3) ஒப்பந்த விவர அறிக்கைகளின் விலை விற்பனை வரி உட்பட ரூ 10-40 (எந்தச் சூழ்நிலையிலும் திருப்பிப் பெற முடியாதது) [illegible] திலோ, இந்திய ரிசர்வ் பாங்கியிலோ செலுத்தப்பட வேண்டும். மற்ற இரசீதுகள், 'நிர்வாகப் பொறியர் (கட்டுமானம்), வடக்குக் கோட்டம், தொழில்பேட்டை, கிண்டி, சென்னை—32' என்ற பெயரில் இருக்க வேண்டும்.

(4) பொறுப்புறுதித் தொகை, செலான்கள் -- கட்டுத்தொகை இரசீது மற்றும் ஷெட்யூல்டு பாங்கிகளின் டிராப்டுகள் ஆகியவை வாயிலாகத்தான் பெற்றுக்கொள்ளப்படும். கிண்டி தொழில்பேட்டை, வடக்குக் கோட்ட நிர்வாகப் பொறியர் (C) பெயரில் ஷெட்யூல்டு பாங்கி டிமாண்ட் டிராப்டுகள் பெறப்பட்டிருக்க வேண்டும். மாநில அரசின் கடன் பத்திரங்களும், தமிழ்நாடு மின் வாரியக் கடன் பத்திரங்களும் மார்க்கெட் மதிப்புக்கு 5 சதவிகிதம் குறைந்த மதிப்பில்தான் பெற்றுக்கொள்ளப்படும். தேசிய சேமிப்பு சர்ட்டிபிகேட்டுகள்கூட தொடர்புடைய அஞ்சல் நிலையத்தின் ஒப்புதலோடு பெற்றுக்கொள்ளப்படும். அரசுடைமையான எந்தப் பாங்கியின் உறுதிப்பாடும் ஏற்றுக்கொள்ளப்படும். இவையன்றி, வேறு எந்த வகையிலும் பணம் பெற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(5) ஒப்பந்ததாரர்கள், பெரிய கட்டிட வேலைகளில் குறைந்தது மூன்றாண்டுக்காலமாவது அனுபவம் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.

சென்னை—17

சி. பி. மாத்யூ,
மேற்பார்வைப் பொறியர்,
கட்டுமானப் பிரிவு.


---

# இருட்டு மண்டபத்திற்குள் ஒளிந்திருக்கின்றவர்களின் மிரட்டல்

[★]

## தொழில் அதிபர்களைப்போல் சில தொழிற்சங்கத் தலைவர்கள் கேள்விக்குறியற்ற கட்டளைகளைக் கழகத்திற்குவிடும் விசித்திரம்

### கழகத் தலைவர்களின் பெருந்தன்மையைக் கோழைத்தனமெனக் கருதுவோரின் கண்ணியமற்ற வாதம்

சென்னை, செப். 30—

"தொழிற்சங்கப் பிணைப்புகளிலிருந்து திராவிட முன்னேற்றக் கழகம் தன்னை விலக்கிக்கொள்ளவேண்டும் -- என்ற அதிகாரக் குரலில் தாக்கீது பிறப்பிக்கப்படுகிறது!

ஆலை அதிபர்கள் அல்லது தொழில் அதிபர்கள், தொழிற் சங்கங்களைப் பார்த்து மிரட்டுவார்கள் -- அச்சுறுத்துவார்கள் -- பலகீனப்படுத்த முனைவார்கள்; இந்த நோக்கமும் போக்கும் அவர்களுக்கே உரிய ஒன்றாகும்!

ஆனால் அதிகாரம் என்னவென்றால், சில தொழிற்சங்கத் தலைவர் [illegible] தங்களைத் தொழில் அதிபர்களைப்போல கருதிக்கொண்டு -- [illegible] அதிபர்களின் குரலில், 'கழக நண்பர்களே -- தொழிற் சங்கங்களிலிருந்து உங்களை விடுவித்துக்கொள்ளுங்கள்' என்று கட்டளையிடுகிறார்கள்; இல்லாவிட்டால்......என்று கேள்விக்குறி மட்டும் போடவில்லை"

நாம் அதைக் கேட்டுக்கொண்டு சும்மாயிருந்தால் அடுத்த கட்டத்தில், 'விடுவித்துக் கொள்ளுங்கள், இல்லாவிட்டால்......என்றும் கூட எச்சரிப்பார்கள்!

நம்மை அவ்வளவு இளித்தவாயர்களாக சில தமிழ்நாட்டு அரசியல் வாதிகள் கருதுகிறார்கள்! தொழிற்சங்கப் பிரச்சினைகளில் நாம் காட்டுகின்ற பெருந்தன்மை -- திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைவர்களும், தொழிற்சங்கத் தலைவர்களும் காட்டுகின்ற பெருந்தன்மையைப் பயந்தாங்கொள்ளித்தனமாக—கோழைத்தனமாக சிலர் கருதுகிறார்கள்; ஆகவேதான், 'முன்னேற்றக் கழக நண்பர்கள் தொழிற் சங்கங்களிலிருந்து விலகவேண்டும்' என்கின்ற கருத்துக்கள் அன்றாடம் பிறப்பிக்கப்படுகின்றன!

கோவையிலேயே நான் குறிப்பிட்டேன் -- 'எல்லாக் கட்சியிலும் உள்ளவர்கள் தொழிற் சங்கங்களிலிருந்து தங்களை விடுவித்துக் கொண்டால், கழகத்தில் உள்ளவர்களும் தங்களை விடுவித்துக் கொள்ளத் தயாராக இருக்கிறார்கள்' என்று; அதுபற்றி 'தினமணி' எழுதியிருக்கின்ற தலையங்கத்தில், 'தொழிற் சங்கங்களில் கட்சிகள் இடம்பெறக்கூடாது'- எல்லாக் கட்சிகளும் அந்த முடிவுக்கு வந்தால் என்னுடைய கட்சியும் அந்த முடிவுக்கு வரும் -- என்று முதலமைச்சர் சொல்லியிருக்கிறார்; இது வரவேற்கக்கூடிய யோசனைதான்; அதற்கு முதலமைச்சரே வழிகாட்டி -- முதலில் தன் கட்சியை விலக்கிக்கொள்ளவேண்டும் என்று உபதேசம் செய்திருக்கிறது; இது எப்படிப்பட்ட உபதேசம் -- எவ்வளவு பாரபட்சமான உபதேசம் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்; 'இதற்குப் பெயர் தர்ம நியாயமா? இந்த தர்ம நியாயத்தை 'தினமணி' ஆசிரியர் எந்த வேதப் புத்தகத்தில் படித்தாரோ தெரியவில்லை! அந்த வேதப் புத்தகம் அப்படித்தான் கூறுகிறதென்றால் அதை வேதப் புத்தகமாக ஒப்புக்கொள்ள என் மனம் இடம் தரவில்லை!

'நாங்களே இருப்போம் -- வேறு யாரும் வரக்கூடாது' என்றால் என்ன அர்த்தம்? 'இருட்டு மண்டபத்திற்குள் விளக்கை எடுத்து வராதே' என்று அங்கே ஒளிந்துகொண்டிருக்கின்ற திருடர்கள் தான் சொல்வார்கள்' என்ற எண்ணத்தால் -- அச்சத்தால்!

"அந்த இருட்டு மண்டபத்திற்குள் வருகின்ற விளக்குதான் திராவிட முன்னேற்றக் கழகத் தொழிற்சங்கம்! 'விளக்கு வருகிறதே' என்று பயப்படுகிறவர்கள், 'விளக்கு வந்தால் நாம் அகப்பட்டு கொள்வோமே' என்று அஞ்சுகிறவர்கள்!"

-- கழகத் தலைவர் கலைஞர்

(அசோக் லேலண்டு தொழிலாளர்கள் சார்பில் பிரதாப் சந்திரன் குடும்ப நிதியளிப்பு விழாவில்)

---

## தமிழ்நாட்டுத் தேசிய மாணவர்படை

### இந்தியாவிலேயே முன்னணியில் திகழ்ந்து வருகிறது

### ஆண்டுக்கு ரூ. 80 இலட்சம் தமிழக அரசு வழங்குகிறது

திருச்சியை அடுத்த கைலாசபுரத்தில் தேசிய மாணவர் படை (என்.சி.சி.)யின் பயிற்சி முகாம் நடைபெற்று வருகிறது.

முகாமை தமிழ்நாடு -- பாண்டிச்சேரி மாநில என்.சி.சி. படை அதிகாரி (இயக்குநர்) மாலியா பார்வையிட்டார்; பிறகு அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:—

"தமிழ்நாட்டில் 28,200 கல்லூரி மாணவ-மாணவிகளும், 87,800 உயர்நிலைப் பள்ளிக்கூட மாணவ -- மாணவிகளும் (என். சி. சி.) படையில் சேர்ந்து பயிற்சிபெறுகிறார்கள்.

மாணவர்களைப் போலவே மாணவிகளும் மி[illegible] ஆர்வத்துடன் இந்தப் படையில் சேர்ந்து நல்ல பயிற்சி பெறுகிறார்கள்; அவர்களுக்குத் தனியாக சில பயிற்சிகளும் சொல்லித்தரப்படுகிறது.

என்.சி.சி. படைக்காகத் தமிழ் நாடு அரசு ஆண்டுதோறும் ரூ. 80 இலட்சம் கொடுத்து வருகிறது.

இந்தியாவிலேயே தமிழ் நாட்டு (என்.சி.சி.) படைதான் கடந்த 3 ஆண்டுகளாக முன்னணியில் நிற்கிறது; சுதந்தர நாள் விழா விழா -- குடியரசு நாள் விழா போன்றவைகளில் தமிழ் நாடு (என்.சி.சி.) மாணவ -- மாணவிகள் கலந்துகொண்டு பயிற்சி பெற்றிருக்கிறார்கள்.

தற்போது தமிழ்நாட்டிலும்; பாண்டிச்சேரியிலும் 11 இடங்களில் (என்.சி.சி.) பயிற்சி முகாம் நடந்து வருகிறது; இதில் சிறந்தவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படும் 120 பேர் அடுத்த ஆண்டு சனவரி 26-ந் தேதி டெல்லியில் நடைபெறும் குடியரசு நாள் விழாவில் கலந்து கொள்வார்கள்.

---

## கைத்தறி ஏற்றுமதியில் சரிவு

சென்னை, ஏப். 30—

சென்ற ஆண்டு ஏப்ரல் முதல் ஜூலை வரையிலுள்ள மாதங்களுடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டு இதே மாதங்களில் [illegible] கைத்தறித் துணி ஏற்றுமதியில் [illegible] ரூ. 1-24 கோடி அளவுக்குக் குறைந்திருக்கிறது.

சென்ற ஆண்டு இந்த மாதங்களில் ரூ. 8.34 கோடிக்கு ஏற்றுமதியாகியுள்ளது; ஆனால், இந்த ஆண்டு ரூ. 7-10 கோடிக்குத்தான் ஏற்றுமதியாகி இருக்கிறது.

'பிளீடிங் மதராஸ்' ரக ஏற்றுமதி ரூ. 2.21 இலட்சத்திலிருந்து ரூ. 93,000 ஆக குறைந்திருக்கிறது.

லுங்கி, சராங் ஏற்றுமதி ரூ. 69.49 இலட்சத்திலிருந்து ரூ 58 42 இலட்சமாகக் குறைந்துள்ளது.

நம் நாடு



## அண்ணால் காந்திக்கு...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

கும் -- சோஷலிசத்துக்கும் தமிழகம் ஓர் அரணாகத் திகழும்' என்று நம்பிக்கை தெரிவித்தார்.

### முதல்வர் கலைஞர்

செப்பேட்டை வழங்கி முதலமைச்சர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"இந்த நேரம் ஒரு மகத்தான நேரமாகும்; ஆளுநர் ஷா, வேறொரு மாநிலத்தைச் சேர்ந்தவராக இருந்தும், அவருக்குத் தமிழகம் செப்பேடு வழங்கிச் சிறப்பிக்கிறது; தேசிய ஒற்றுமையில் தமிழகம் எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறது என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

தமக்காக, தமது தாமிரப்பட்டயத்தைப் பெற்றுக்கொள்ளும்படி இராஜாஜி என்னைக் கேட்டுக் கொண்டிருந்தார்; என் சார்பாகவும் -- தமிழக அரசின் சார்பாகவும் அவருக்கு நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தி. மு. கழகம் நேரடியாக விடுதலைப் போராட்டங்களில் ஈடுபடவில்லையாயினும், விடுதலை பெற்ற மக்கள் பொறுப்புக்களை உணர்ந்து செயல்படும் வகையில் சமுதாயப் புரட்சியில் ஈடுபட்டிருந்ததை மக்கள் நன்கு அறிவர்."

### நாவலர் நெடுஞ்செழியன்

விழாவில் கலந்துகொண்ட கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், தாய்மொழி மூலம் கல்வி கற்பிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை காந்தியார் கூறியிருப்பதை எடுத்துக் காட்டினார்.

மற்றும், மேலவைத் துணைத் தலைவர் ம. பொ. சிவஞானம், ஏ. ஆர். பெருமாள், எஸ். எஸ் இராமசாமி படையாச்சி, அப்துல் வாகாப், குன்றக்குடி அடிகளார் ஆகியோரும் விழாவில் பேசினர்.

பிறகு, சீர்காழி கோவிந்தராசன் குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

## வ.உ.சி. இழுத்த செக்கு திறப்பு விழா

இவ்விழா துவங்குவதற்குமுன், சென்னை அரசினர் தோட்டத்தில் உள்ள காந்தி இல்லத்தில், வ. உ. சிதம்பரனார் சிறையில் இழுத்த செக்கினை, முதலமைச்சர் கலைஞர் பொதுமக்கள் பார்வைக்குத் திறந்துவைத்தார்.

## காந்தி சிலைக்கு மாலை

காந்தி பிறந்த நாள் விழாவை முன்னிட்டு நேற்று காலை, சென்னைக் கடற்கரையில் உள்ள காந்தி சிலைக்கு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

அரசினர் தோட்டத்தில் உள்ள காந்தி இல்லத்தில் நேற்று காலை முதல் மாலைவரை நூற்புப் பணி நடைபெற்றது.

போக்குவரத்துத் துறை அமைச்சர்

## ச. இராமச்சந்திரன்

### நிகழ்ச்சிகள்

அக். 4 காலை 10-மணி: வழுதாவூர் அரசினர் உயர்நிலைப் பள்ளி அறிவியல் ஆய்வுக்கூடத் திறப்பு; 11-மணி: வழுதாவூர் அரிசன காலனி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி திறப்பு; மதியம் 12: மணி; கலிங்கமலை மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி திறப்பு; மாலை 5-30 மணி: வக்கிரிப்பாளையம் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி திறப்பு -- மின் விளக்கேற்று விழா; இரவு 7-30 மணி; வழுதாவூர் பொது மக்கள் வரவேற்பு.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, [illegible] அச்சகத்தில் (...) [illegible] அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

# பகுத்தறிவுப் புலவர் செல்வராசனார் மறைவு

சென்னை, அக். 3—

பழம்பெரும் இயக்கத் தோழரும்--பத்திரிகைத் துறையில் பழுத்த அனுபவம் பெற்றவரும்--தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் பேரன்புக்குரியவராகத் திகழ்ந்தவருமான புலவர் பு. செல்வராசன் அவர்கள் நேற்றைக்கு முன்னாள் இயற்கையெய்தினார் என்ற செய்தியை ஆழ்ந்த துயருடன் அறிவித்துக் கொள்கிறோம்.

சுயமரியாதை இயக்கத் துவக்க காலத்தில் தந்தை பெரியாருக்குப் பெருந்துணையாக இருந்த தொண்டர்களில் புலவர் செல்வராசனாரும் ஒருவர் ஆவார்; பேரறிஞர் அண்ணா அவர்களின் உடன் தோழர்களில் மிக முக்கியமானவர் ஆவார்.

அச்சகத் தொழிலாளியாகத் தம் வாழ்க்கையைத் தொடங்கிய புலவர் செல்வராசனார் அவர்கள், தம் சொந்த முயற்சியால் ஆங்கிலத்திலும்—தமிழிலும் புலமை பெற்றுப் பத்திரிகை திருப்பராகவும் -- உதவியாசிரியராகவும் -- பிறகு ஆசிரியராகவும் படிப்படியாக முன்னேறினார்; பின்னர் பத்திரிகைத் தொழிலை விடுத்தும் பள்ளியாசிரியராகம் பணியை மேற்கொண்டபோதிலும், பத்திரிகைத் தொடர்பையும் அறவே விட்டுவிடவில்லை; நமது இயக்க ஏடுகள் அனைத்திலும் இவருக்குத் தொடர்பு இருந்து வந்திருக்கிறது.

சுயமரியாதை இயக்கப் பகுத்தறிவுக் கருத்துக்களைப் பரப்பும் வகையில் பல நூல்களை எழுதி வெளியிட்ட இவர், பள்ளிப் பாட நூல்களை எழுதுவதிலும் வல்லவராவார்; எண்ணிறந்த பாட நூல்கள் இவரால் எழுதி வெளியிடப்பட்டுள்ளன.

சென்னை இந்து ஹைஸ்கூல் உயர்நிலைப் பள்ளியில் தலைமைத் தமிழாசிரியராக இருந்து அண்மையில் ஓய்வு பெற்ற புலவர் செல்வராசனார், மறைந்த தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் மா. இராசமாணிக்கனாரின் மைத்துனர் ஆவார்.

நீதிக் கட்சியால் நடத்தப்பட்ட 'திராவிடன்' நாளிதழின் உதவி ஆசிரியராகவும், 'தாருல் இஸ்லாம்' எனும் நாளிதழின் ஆசிரியராகவும், தந்தை பெரியார் அவர்களின் 'விடுதலை' நாளிதழிலும், 'குடியரசு' வார இதழிலும் ஆசிரியராக இருந்திருக்கிறார்; 'கதிரவன்' என்ற உயர்தரமான இலக்கியத் திங்கள் இதழைத் தாமே தொடங்கி நடத்தியிருக்கிறார்.

தி.மு.க. துவங்கிய காலத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த 'மாலை மணி' நாளிதழிலும், 'நம் நாடு' துவக்க காலத்தில் ஆசிரியர் குழுவிலும் இருந்து பணியாற்றியிருக்கிறார்.

இவர் எழுதிய 'கறுப்புச் சட்டைப் படை' என்ற நூலுக்காக இவர் மீது பல்வேறு சட்டப் பிரிவுகளின்கீழ் அந்த நாள் காங்கிரசு ஆட்சி வழக்குத் தொடர்ந்தது; நீதிமன்றத்தில், வழக்கறிஞரை அமர்த்தாமல் தாமே வாதாடி -- அவ்வழக்கிலிருந்து விடுதலை பெற்றார்.

மலேயாவில் வெளியிடப்பட்ட 'சுந்தரமூர்த்தி நாயனார் கிரிமினல் கேஸ்' என்ற புத்தகம் இவரால் சென்னையில் உருவாக்கப்பட்டதாகும்; இதற்கும் அன்றையத் தமிழக அரசு தடை விதித்திருந்தது.

இவ்வாறு, தம் எழுத்தாலும் -- பேச்சாலும் -- இன்றைய பணிகளாலும் நமது இயக்கத்தின் வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றிய பெரும் புலவராக திரு. செல்வராசனார் அவர்கள், தமது 64-வது வயதில் திடீரென மாரடைப்பின் காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு -- அங்கு உயிர்நீத்தார் என்ற செய்தி கிட்டியது.

இவருடைய பிரிவு, நமது இயக்கத்திற்கு மட்டுமன்றித் தமிழ் மொழிக்கும் தமிழ் உலகத்திற்கும் பேரிழப்பாகும்.

அன்னாரைப் பிரிந்து துயருறும் அவர்தம் குடும்பத்தாருக்கும் -- நண்பர்கட்கும் நமது ஆழ்ந்த பரிவையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

—ஆசிரியர்

## இறுதிப் பயணம்

புலவர் செல்வராசனாரின் உடல் நேற்று மாலை ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு மூலக்கொத்தளம் இடுகாட்டில் எரியூட்டப்பட்டது.

மாநிலத் தமிழாசிரியர் கழகம்—டாக்டர் மா. இராசமாணிக்கனார் நினைவுமன்றம்—கிரசண்ட் பள்ளி—அப்துல் ஹக்கீம் உயர்நிலைப் பள்ளி ஆகியவை சார்பில் மலர் வளையம் வைத்து இறுதி மரியாதை செலுத்தப்பட்டது.

சவ ஊர்வலத்தில் ஏராளமான தமிழாசிரியர்களும் -- இயக்கத் தோழர்களும் கலந்துகொண்டனர்.

### அமைச்சர் என். வி. நடராசன்

கழகத் துணைப் பொதுச்செயலாளர் அமைச்சர் என். வி. நடராசன் அவர்கள், செல்வராசனார் இல்லம் வந்து மாலையணிவித்துத் தமது சார்பிலும் -- தலைமைக் கழகச் சார்பிலும இறுதி மரியாதை தெரிவித்துக் கொண்டார்.

'விடுதலை' ஆசிரியர் கி. வீரமணி அவர்களும் தந்தை பெரியார் சார்பில்வந்து இறுதி மரியாதை தெரிவித்துக் கொண்டார்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நன்மை செய்வதாகும்' என்றார்.

"காந்தி மண்டபத்தில் காந்தி விழா ஏற்பாடு செய்திருப்பதே சலாச் [illegible]ததாகும்; ஏனெனில், [illegible]ற்காகவே இந்த மண்டபம் [illegible]ட்டப்பட்டதாகும்; இந்த விழாவைத் தொடங்கி வைக்க என்னை ஆளுநர் அழைத்தபோது நான், 'என்னுடைய நிகழ்ச்சியில் ஆளுநர் கலந்துகொண்டால்தான் நான் அவருடைய நிகழ்ச்சியில் கலந்து கொள்வேன் என்று நிபந்தனை விதித்தேன்" என்றார் கலைஞர்.

இதைக் குறிப்பிட்டு ஆளுநர் பேசுகையில், 'நான் முதல்வரின் ஆலோசனைப்படித்தான் செயல்பட்டு வருகிறேன்; தம்மை மிஞ்சும்படி முதல்வர் என்னைக் கேட்டுக் கொண்டால், நான் அப்படியே செயல்படுவேன்; அவர் என்னிடம் அப்படிக் கூறவில்லையானால், நான் அவரை மிஞ்சப் போவதும் இல்லை' என்று ஆளுநர் நகைச்சுவையுடன் கூறிய போது மண்டபமே அதிரும் வகையில் சிரிப்பொலி எழுந்தது!

### பள்ளிக் கட்டடத் திறப்பு

நாமக்கல் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த வேட்டாம்பாடி ஊராட்சிப் பள்ளிக் கட்டிடத் திறப்பு விழா, 4—10—72 காலை 10-மணிக்கு ஊராட்சித் தலைவர் திரு. வி. சுப்பிரமணியன் தலைமையிலும்—பாவலர் மா. முத்துசாமி எம்.பி. முன்னிலையிலும் நடைபெறும்; அமைச்சர் மு. கண்ணப்பன் அவர்கள் பள்ளிக் கட்டடத்தைத் திறந்துவைப்பார்.

# தமிழ்நாடு பரிசுச் சீட்டுக் குலுக்கல் முடிவுகள்

30 9-1972 அன்று இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற 48-வது குலுக்கல் முடிவுகள் – பரிசுகள் பெற்ற எண்களின் விவரம் :--

## 'ஜே. ஓ.' வரிசை

ஒரு முதல் பரிசு: ரூ. 1,00,000

**956118**

5 இரண்டாவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ.10,000 விதம்

121097 173718 396744 732101 867599

10 மூன்றாவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ. 5,000 விதம்

026937 092871 170122 412311
440124 512915 570850 687986
888992 915157

50 நான்காவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ. 1,000 விதம்

021970 046328 082416 091365
121080 156388 162293 172919
232011 245171 260780 277566
285311 292491 341071 359942
405391 428352 433434 438741
444328 461963 501844 502903
506890 546458 559929 572971
623854 672394 718319 724063
765813 779669 782553 791552
805394 805822 812102 842629
914605 930434 933180 934049
950766 959505 960821 971944
975256 982295

1,000 ஐந்தாவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ. 100 விதம்

00-லிருந்து 99-வரையிலான எண்களில் துவங்கி கீழ்க்காணும் எண்களில் முடிவடையும் எலலா எண்களுக்கும்:—

1389 1625 1781 2483 3500
4791 5518 6969 8362 9842

## 'ஜே. பி.' வரிசை

ஒரு முதல் பரிசு: ரூ. 1,00,000

**541092**

5 இரண்டாவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ. 10,000 விதம்

024254 258232 831113 876093 927172

10 மூன்றாவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ. 5,000 விதம்

042994 072242 097574 168632
221315 265314 377663 386742
614205 782724

50 நான்காவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ. 1,000 விதம்

044082 126492 128226 146012
146918 163767 169129 169993
201391 205962 246865 262001
270305 302862 309520 341543
372351 401489 418023 423241
454167 499822 502129 507877
524899 529357 532489 562299
579894 581493 612172 669273
703578 704399 721613 730881
746201 747431 763477 777725
802020 812428 821304 855906
876007 887413 911056 937691
967566 983826

1,000 ஐந்தாவது பரிசுகள் —
ஒவ்வொன்றும் ரூ. விதம்100

00-லிருந்து 99-வரையிலான எண்களில் துவங்கி கீழ்க்காணும் எண்களில் முடிவடையும் எல்லா எண்களுக்கும்:—

3936 4213 4217 4868 6018
6200 7396 7699 8679 8816

முதல் பரிசு, இரண்டாவது பரிசு பெற்ற சிட்டுக்களை வைத்திருப்பவர்கள், பரிசுத் தொகையைப் பெற சென்னை அரசினர் தோட்டத்தில் உள்ள தமிழகப் பரிசுச் சீட்டுத் திட்ட இயக்குநர் அலுவலகத்திலும், 3-வது பரிசுமுதல் 5-வது பரிசுவரை பரிசு பெற்ற சிட்டுக்களை வைததிருப்பவர்கள், பரிசுத் தொகையைப் பெறத் தமிழகத்தில் உள்ள எந்த ஒரு துணைக் கருவூலத்திலும் அதற்குரிய படிவங்களை நிரப்பிக் கொடுத்துப் பரிசுகளைப் பெறலாம்.

எழுதித் தரவேண்டிய படிவங்கள் பரிசுகள் பெறவேண்டிய அலுவலகங்களில் கிடைக்கும். விண்ணப்பங்களை நேரிலோ அல்லது ரிசர்வ் பாங்கு அட்டவணையில் உள்ள வங்கிகள் மூலமாகவோ கொடுக்கலாம்.

பரிசு பெற்ற எண்கள் அடங்கிய விவரப் பட்டியல் தமிழக அரசிதழ்களிலும் அச்சிடப்படுகின்றன; மேற்படி பட்டியல் வேண்டுவோர், 'உதவிப் பணி மேலாளர், அரசு வெளியீட்டு நிலையம், 166, அண்ணா சாலை, சென்னை-2' என்ற முகவரிக்கு எழுதி அதற்குரிய கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

**பரிசுச் சீட்டு பற்றி விவரங்கள் எதுவும் தேவைப்பட்டால், 'இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2' என்ற முகவரிக்கு எழுத வேண்டும்.**

விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளக் கடைசித் தேதி: 27—10—1972

## 49-வது குலுக்கலுக்கு மாற்றியமைக்கப்பட்ட பரிசுத் தொகை

1972-ம் வருடம் நவம்பர் மாதம் நடக்க இருக்கும் 49-வது பரிசுச் சீட்டுக் குலுக்கல் முதல் தமிழகப் பரிசுச் சீட்டில் கீழ்க்கண்டபடி பரிசுகளையும், பரிசுத் தொகையையும் மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது!—

| பரிசு | பரிசுகள் | பரிசுத் தொகை | மொத்தப் பரிசுத் தொகை |
|---|---|---|---|
| முதல் பரிசு | 1 | ரூ. 100000 | ரூ. 1,00 000 |
| இரண்டாவது பரிசு | 2 | ரூ. 10000 | ரூ. 20,000 |
| மூன்றாவது பரிசு | 75 | ரூ. 1000 | ரூ. 75,000 |
| நான்காவது பரிசு | 100 | ரூ. 500 | ரூ. 50,000 |
| ஐந்தாவது பரிசு | 500 | ரூ. 100 | ரூ. 50,000 |
| ஆறாவது பரிசு | 1000 | ரூ. 50 | ரூ. 50,000 |

இது தவிர, ஆறுதல் பரிசுகளும் உண்டு; முதல் பரிசு—இரண்டாவது பரிசு பெறும் சிட்டுகளுக்கு முன்னும் பின்னும் எண்கள் உள்ள சிட்டுகளுக்கு இதன்படி ஆறுதல் பரிசு கொடுக்கப்படும்.

ஆறுதல் பரிசுகளின் விவரம் வருமாறு!—

| பரிசு | பரிசுகள் | பரிசுத் தொகை | மொத்தப் பரிசுத் தொகை |
|---|---|---|---|
| முதல் பரிசுக்கு | 2 | ரூ. 1500 | ரூ. 3,000 |
| இரண்டாவது பரிசுக்கு | 4 | ரூ. 500 | ரூ. 2,000 |
| | 1684 | | ரூ. 3,50,000 |

### 49-வது குலுக்கல்

49-வது பரிசுச் சீட்டுக் குலுக்கல் 1972 நவம்பர் மாதம் 10-ம் தேதி நடைபெறும்.

**மொத்தப் பரிசுகள்: 5,052**

**மொத்தப் பரிசுத் தொகை: ரூ. 10,50,000**

அடுத்த குலுக்கல்: 10-11-1972 -- அடுத்த குலுக்கலுக்கு வரிசைகள்: 3 (மூன்று) -- 'ஜே. க்யூ.' முதல் 'ஜே. எஸ்.'

இதுவரை 295 இலட்சாதிபதிகளைத் தமிழக அரசு உருவாக்கியுள்ளது!

பரிசுச் சீட்டுத் திட்டத்தின் மூலம் கிடைக்கும் வருவாய், விற்பனை அடிப்படையில் மாவட்டங்களுக்குத் திருப்பித் தரப்படுகிறது. கல்விக்கூடங்கள் கட்ட—நோய் தீர்க்கும் மருந்தகங்கள் அமைக்க இப்பணம் செலவிடப்படுகின்றது. நாடு நலம் பெற—உங்கள் நல்வாய்ப்பினைச் சோதிக்க—வாங்கிடுவீர் தமிழகப் பரிசுச் சீட்டு!

செலவு ஒரு ரூபாய்

வரவோ லட்ச ரூபாய்

**ஒரு சீட்டின் விலை ரூ. 1-தான்**

தே. அரங்கநாதன்,
தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2.